முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் பீமசேனன் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

25.01.2019, வெள்ளிக்கிழமை

1. **தருமபலம் தவபலம் கொண்ட**
**தவராஜனே ஆறுமுக அரங்கனே**
**கருமவினை வெல்லும் வண்ணம்**
**கந்தமகா தீட்சை கொண்ட தேசிகனே**

2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் ஒளி சூட்சும நூலை
ஆசிபட **விளம்பி கலை திங்கள்**
**அகிலமதில் லாப திகதி புகர்வாரம்**
**(விளம்பி வருடம் தை மாதம் 11ம் நாள் 25.01.2019, வெள்ளிக்கிழமை)**

3. வாரமதில் பீமசேனன் யானும்
வழங்கிடுவேன் உலகோர் நலம் பெற
சோரமில்லா தேக மனோ பலமுற
சுப்பிரமணியர் வழிபாட்டுக்கு வர வேணும்

4. வேண்டுமே கலியுகம் தன்னில்
வேலவனே அரங்கமகானாக வந்து
தொண்டாற்றும் சன்மார்க்க வழியை
தொண்டர்களாக உலக மக்கள்

5. உலக மக்கள் வணங்கி வந்து
உயர் தீட்சைதனை அடைந்து
பலமான மனோ சக்தி பெற
பரோபகார துணிவு பெறவே

6. பெறவே மக்களிடை இனிதே
பேதமிலா உயர் குணம் வளரும்
கூறவே தரும சிந்தைபடவே
குவலயமே அன்னதானமதின் அவசியம்

7. அவசியம் உணரப்பட நேரும்
அரங்கனே தலைவன் என்னும்
புவனம் ஆச்சரியப்படும் வண்ணம்
புதுமையும் வளமும் காணும்

8. காணவே அரங்கன் தொண்டர்படை
கடமையென கண்ணியம் என
ஞானதேசிகன் அருள்பார்வை பெற்று
ஞாலமதில் தொடர்ந்து வருக

9. வருகவே கலியுகம் மாறும்
வருகவே கலிமாயை விலகும்
முருகன் ஆளுமை மிகுந்த
முழுமைபெற்ற ஞானவான்கள் நிறைந்த

10. நிறைந்த ஞான ஆட்சி மலரும்
நிலவுலகோர் நிம்மதி அமைதிபட
குறைவிலா வாழ்வும் வளமும்
குவலயமெங்கும் பாதுகாப்பு கூடும்

11. கூடவே அரங்கனை நோக்கி
குருமார்களே ஞானவழி மக்களே
நாடவே சடுதி மாற்றம் ஏற்றம்
ஞானயுக மாற்றம் உறுதி ஆகும் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் பீமசேனன் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

எல்லையில்லாது தருமங்களை செய்து தருமபலமும் அளவிலாது தருமங்கள் செய்து தவபலமும் மிகக் கொண்டிட்ட தவராசனே வள்ளல் ஞானியே ஆறுமுக அரங்கமகா தேசிகனே கருமவினைகளை வென்று காக்கும்படியான கந்தமகா தீட்சை அருளும் ஞானதேசிகனே ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் தை மாதம் 11ம் நாள் 25.01.2019, வெள்ளிக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே பீமசேனன் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் பீமசேனன்.

குற்றமற்ற தேகத்தையும் குற்றமற்ற மனோ பலத்தையும் பெற்றிட வேண்டுமாயின் அவரவரும் மும்மலக் குற்றம் நீக்கிய முதன்மை மகா ஞானி முருகப்பெருமானை குலதெய்வமாக ஏற்றுக் கொண்டு வழிபட்டு வர வேண்டும். அவ்விதமே முருகப்பெருமானை மனம் உருகி தினம்தினம் தவறாமல் வழிபாடுகள் செய்து வர, அவரவரும் ஆரோக்கியமான தேகத்தையும் மனோபலமும் பெற்று சிறப்படைவார்கள்.

சர்வ வல்லமை பொருந்திய முருகப்பெருமானே இக்கலியுகத்தினிலே அரங்கமகா தேசிகனாக அவதரித்து உலக மக்களை கடைத்தேற்றிட ஏராளமான அறப்பணிகளையும் செய்து மக்களை கடைத்தேற்றி வருகின்றார். அத்தகைய தானதருமப் பணிகளிலே, ஞானப்பணிகளிலே தொண்டுகள் செய்தும் பொருளுதவிகள் செய்தும் உலக மக்கள் சன்மார்க்க வழியை பின்பற்றி நடந்து அரங்கனின் தொண்டர்களாகிட வேண்டும்.

அப்படி அரங்கனை முருகப்பெருமானாக எண்ணி மனஉறுதியுடன் அரங்கன் சேவைகளை செய்து தினம்தினம் மறவாமல் அரங்கமகானை உளமார மனம் உருகி எண்ணி பூஜைகள் செய்தும் வருவதுடன் அரங்கமகானின் திருக்கரங்களால் தீட்சை உபதேசமும் அடைந்து அவரவரும் பலம்மிக்க மனோதிடத்தையும் உலக உயிர்களின் மீது அன்பு செலுத்தும் ஜீவதயவான பரோபகார துணிவையும் பெற்று மக்கள் நன்மக்களாக ஆகிட, உலக மக்களிடையே உள்ள வேற்றுமைகள் எல்லாம் மறைந்து பேதாபேதங்கள் எல்லாம் விலகி சமதர்ம சமநிலை எனும் உயர் குணம் வளரும். உலகம் முழுதும் ஜீவதயவின் அடிப்படையான தருமத்தின் அடிப்படையான அன்னதானத்தின் அவசியத்தை உணர்ந்து தாராளமாய் உலகமெங்கும் அன்னதான செயல்கள் வெகுவாய்

செய்யப்படும். உலகமெலாம் ஆறுமுக அரங்கனே தலைவன் என்பதை ஏற்றுக் கொண்டு உலகமெலாம் ஆச்சரியமும் அதிசயமும்படுகின்ற வகையில் புதுமையையும் எல்லா வளங்களையும் கண்டு சிறப்படையும்.

உலக மாற்றம்தனை நிகழ்த்தும் ஆறுமுக அரங்கமகானின் தொண்டர்கள் என ஆகியோர் கூடிய தொண்டர்படை அன்பரெல்லாம் அவரவரும் தம்தம் கடமையை உணர்ந்து செயல்பட வேண்டும். கண்ணியத்துடன் அரங்கன் புகழ் பரவிடுமாறு நடந்து வர வேண்டும். இவ்விதமே தொண்டரெல்லாம் கடமை உணர்ச்சி மாறாது கண்ணியத்துடன் நடந்து வரவர, இந்த கலியுகமும் மாற்றமடையும். உலகை துன்பத்தில் ஆழ்த்தும் கலியுக மாயையும் உலகினின்று விலகிடும். உலகமெலாம் ஞானவான்கள் அதிகமாகி உலகமெலாம் முருகப்பெருமானின் ஞானஆட்சி பரவி உலகமே முருகப்பெருமானின் தலைமையில் ஞானஆட்சி நடந்திடும்.

முருகப்பெருமானின் தலைமையில் உலகினில் அமையும் ஞான ஆட்சியிலே மக்களெல்லாம் குறைவின்றி நிறைவான வாழ்வை வாழ்வார்கள். வளம் பெருகி நிற்கும் உலகமெலாம் ஆறுமுக அரங்கனின், முருகப்பெருமானின், ஞானிகளின் அருள் பாதுகாப்பில் அமைதியுடன் இருக்கும்.

உலகினில் உள்ள ஞானவான்களே, குருமார்களே, ஞானவழி செல்லும் மக்களே நீங்களெல்லாம் விரைந்து யுகமாற்ற ஞானி ஆறுமுக அரங்கனை நாடி வந்து அரங்கனை குருவாக ஏற்றிட்டால் எந்த அளவு விரைந்து அரங்கனை குருவாய் ஏற்கிறீர்களோ அந்த அளவிற்கு உலகப் பெருமாற்றமானது விரைந்து இவ்வுலகினில் நிகழ்ந்து கலியுக துன்பமெல்லாம் உலகினில் இருந்து விலகி உலகமே ஞானயுகமாக மாறிடும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் பீமசேனன்.

–சுபம்–